சர்க்கார் முயற்சி செய்ததா? உபரியாக இருக்கக்கூடிய 'ப்ரோக்கன் ரைஸை' இறக்குமதி செய்வதில் என்ன கஷ்டம் இருக்கிறது என்பதை அமைச்சரவர்கள் அறிவிப்பார்களா?

மாண்புமிகு திரு. செ. மாதவன் : ஆந்திர விவசாயிகள் தமிழ் நாட்டிலுள்ள பஞ்சத்தைப் பார்த்து, மனமிரங்கி, நெல், அரிசி, வைக்கோல் ஆகியவைகளைத் தருவதாகச் சொன்னார்கள். அதை மத்திய அரசு மறுத்துவிட்டது. ஆந்திர அரிசியை மற்ற மாநிலங்களுக்கு அனுப்ப அவர்கள் தயாராக இருந்தாலும் மத்திய அரசு ஒவ்வொரு மாநிலத்திற்கும் இவ்வளவு என்று நிர்ணயித்து, அவர்களுடைய ஃபுட் கார்ப்பரேஷன் மூலம் தருகிறார்கள். அதிலே ஓரளவு நமக்குக் கிடைத்திருக்கிறது.

நாட்டறம்பள்ளியில் துணைப் பதிவாளர் அலுவலகம்

* 156 வினா—**திரு. ஜி. ராமசாமி :**
திரு. டி. சி. திம்மராய கவுண்டர் : } மாண்புமிகு வருவாய்த் துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) நாட்டறம்பள்ளியில் துணைப் பதிவாளர் அலுவலகம் தொடங்கும் யோசனை அரசுக்கு உண்டா?

(இ) ஆமெனில், அதன் விவரம் என்ன?

மாண்புமிகு திரு. செ. மாதவன் : (அ) இல்லை.

(இ) இக் கேள்விக்கு இடமில்லை.

Spare parts for buses

* 157. *Q.*—THIRU N. K. PALANISAMY : Will the Hon. the Minister for Labour and Transport be pleased to state—

(*a*) whether there is any proposal under the consideration of the Government to set up a Centralised Organisation to purchase spare parts and maintain inventory control for all the State Transport Corporations; and

(*b*) if so, the details thereof?

மாண்புமிகு திரு. க. இராசாராம் : (அ) இல்லை.

(இ) இக்கேள்வி எழவில்லை.

1975 அக்டோபர் 31]

திரு. என். கே. பழனிசாமி: சார், ஸ்பேர் பார்ட்ஸினுல்தான் பஸ்களுக்கு அதிக நஷ்டம் ஏற்படுகிறது. காரணம் பல சமயங்களில் ஸ்பேர் பார்ட்ஸ் கிடைப்பதில்லே; அதனுல் பஸ்கள் ஓடவில்லே. அதுமட்டுமல்லாமல் திருட்டும் நடக்கிறது. இன்னும் ஏராளமான பஸ்களே நாம் எடுத்துக்கொள்ளப் போகிறோம். ஆகையால், இங்கேயே ஸ்பேர் பார்ட்ஸ் செய்ய திட்டம் வகுத்து, அதன் அடிப்படையில் செய்ய வேண்டும்.

அதுமட்டுமல்ல. இப்போது பல்லவன் போக்குவரத்து, சோழன் போக்குவரத்து போன்ற பல்வேறு போக்குவரத்துக் கழகங்கள் இருக்கின்றன. அதை எல்லாம் சென்ட்ரலேஸ் செய்து, என்னென்ன சாமான்கள் எப்போது சப்ளே செய்ய வேண்டும் என்பதை அறிந்து உடனடியாக சப்ளே செய்யவும், திருட்டைத் தடுக்கவும் சர்க்கார் திட்டம் வைத்திருக்கிறதா? அப்படியானுல் அதன் விவரம் என்ன?

மாண்புமிகு திரு. க. இராசாராம்: ஸ்பேர் பார்ட்ஸ் வாங்க வல்லுநர் குழு ஏற்படுத்தப்பட்டிருக்கிறது. அதன் மூலம்தான் வாங்குகிருர்கள். ஸ்பேர் பார்ட்ஸ் நாமே உற்பத்திச் செய்யலாம் என்ற ஆலோசனே இருந்தது. எல்லாப் பொருட்களேயும் உற்பத்தி செய்வது கடினம் என்று கருதி கைவிடப்பட்டிருக்கிறது. இப்போது ஸ்பேர் பார்ட்ஸ் சப்ளே செய்வதில் எந்த விதமான தொல்லேயும் இல்லாமல் நல்லமுறையில் செயல்பட்டு வருகிறது என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

திரு தி. பொன்னுமலே: தலேவரவர்களே, இந்த ஸ்பேர் பார்ட்ஸ் வாங்க வல்லுநர் குழு இருப்பதாக அமைச்சரவர்கள் சொன்னுர்கள். ஆனுலும் நல்ல சாமான்களேக் கூட 'கண்டம்' செய்துவிட்டு, புதிய சாமான்களேப் பொருத்தி விடுகிருர்கள். பிறகு 'கண்டம்' ஆன சாமான்களே நல்ல விலேக்கு விற்று விடுகிருர்கள். அதைப் பரிசீலனே செய்து, நல்லமுறையில் விற்பனே செய்ய அரசு நடவடிக்கை எடுக்குமா?

மாண்புமிகு திரு. க. இராசாராம்: அதைக் கூட இப்போது ஒவ்வொரு இடத்திலும் போய் சோதனை செய்து பார்த்து, 'கண்டம்' ஆன பொருட்கள் என்னென்ன என்பதைப் பார்த்து, உரிய நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது. ஆகவே, அதிலும் அதிகமான தவறுகள் எதுவும் இல்லை.

திரு. சி. ஆறுமுகம்: தலைவரவர்களே, அரசுத் துறையிலே இயங்குகின்ற போக்குவரத்துகளுக்கு ஆண்டுதோறும் எவ்வளவு உதிரி உறுப்புகளை வாங்குகிறோம்? அதிலே அன்றாடம் தேவைப் படுகிற உதிரி உறுப்புகள் எவ்வளவு? இன்றியமையாத உதிரி உறுப்புகளை நாமே அரசுத் துறையில் செய்வதற்கு முன்வந்தால் இன்றைக்கு பல கோடி ரூபாய் அரசுக்கு மிச்சமாகும். . .

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: கேள்வி கேட்கும் போது விளக்கம் கொடுக்க வேண்டியதில்லை. திரு. என். கே. பழனிசாமி அவர்கள் ஆரம்பித்தார்கள்; இப்போது எல்லோரும் ஆரம்பித்து விட்டார்கள். கேள்வியை மட்டும் கேளுங்கள்.

திரு. சி. ஆறுமுகம்: விளக்கம் கொடுத்தால்தான் பதில் சொல்ல வசதியாக இருக்கும். அதை கருத்திலே கொண்டு நம் அரசுத் துறையிலே உதிரி உறுப்புகளை உற்பத்தி செய்ய முன் வந்தால், வட மாநிலங்களிலிருந்து வருகிற மட்டமான பொருட் களைக் கூட வாங்கவேண்டியதில்லை. சில சமயங்களில் அவர்கள் மட்டமான பொருட்களைக் கூட அனுப்பி வைக்கிறார்கள். ஆகவே, முக்கியமான பொருட்களையாவது இங்கே உற்பத்தி செய்ய அரசு நடவடிக்கை எடுக்குமா?

மாண்புமிகு திரு. க. இராசாராம்: ஸ்பேர் பார்ட்ஸ் வாங்க வல்லுநர் குழு இருக்கிறது என்று ஏற்கெனவே சொன்னேன். எல்லா ஸ்பேர் பார்ட்ஸும் 'ஜெனுயின்'தானா என்று பார்த்து தான் வாங்குகிறோம். வட மாநிலங்களிலிருந்து வருகின்ற மட்ட மான பொருட்களை அரசுத் துறையில் வாங்குவதில்லை. மாண்புமிகு உறுப்பினர் அவர்களைப் போன்றவர்கள்தான் அந்த பொருட்களை வாங்குவது வழக்கம் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

1975 அக்டோபர் 31]

திரு. கே. எ. வகாப்: தலைவரவர்களே, இப்போது இந்த வல்லுநர் குழு ஸ்பேர் பார்ட்ஸ் வாங்குகிறது என்று சொன்னார்கள். அவர்கள் எந்த அடிப்படையிலே வாங்கு கிறார்கள்? டெண்டர் போன்ற அமைப்புகளின் மூலம் வாங்கு கிறார்களா அல்லது ஒரு குறிப்பிட்ட கம்பெனியிடம் ஒப்பந்தம் செய்து வாங்குகிறார்களா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. க. இராசாராம்: ஜெனுயின் பார்ட்ஸ்தான் வாங்கப்படுகிறது; இப்போது டி.வி.எஸ். லூக்காஸ் கம்பெனி யிலிருந்து வாங்குகிறார்கள். அதற்கு மார்க்கெட் இருக்கிறது; அங்கிருந்து வாங்க அனுமதிக்கப்பட்டிருக்கிறது. மத்திய அரசில் ஒரு குழு இருக்கிறது. எந்தெந்த பொருள்கள் தரமானவை என்று அந்த குழு, அங்கீகரித்திருக்கிறது; விலையையும் நிர்ணயித்து இருக்கிறது. அதைப் பார்த்து நியாயமான முறையில் வாங்குகிறார்கள்.

திரு. செ. அரங்கநாயகம்: தலைவரவர்களே, வாங்குகிற உதிரிப் பொருட்களில் எத்தனை சதவிகிதம் தமிழ்நாட்டில் உற்பத்தி செய்யப்படுகின்றனவை? தமிழ்நாட்டில் உற்பத்தியாகின்ற பொருட்களுக்கு முதலிடம் தரவேண்டுமென்று நிபுணர் குழு ஏற்றுக் கொண்டிருக்கிறதா?

மாண்புமிகு திரு. க. இராசாராம்: தமிழ்நாட்டில் தயாரா கின்ற எல்லா மோட்டார் வாகனப் பொருட்களையும் தமிழ் நாட்டில்தான் வாங்குகிறார்கள்.

மோட்டார் வாகனங்களில் ஒலியெழுப்பு கருவிகள்

* 158 **வினா—திரு. என். கிட்டப்பா:** மாண்புமிகு தொழி லாளர் நலன்-போக்குவரத்துத்துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

நகராட்சிப் பகுதிகளில் இரவு நேரங்களில் பேருந்துகள், லாரிகளில் "மியூசிக்கல் ஹார்ன்" ஒலிப்பதைத் தடை செய்திடும் செயற்குறிப்பு அரசிடம் உள்ளதா?